வேறான விடைப்புத்தகத்தினை உபயோகிப்பதுடன் பாடத்தின் பெயரை **"முகாமையியல்"** என எழுதுக.

முழுப்பதிப்புரிமையுடையது

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இடைநிலைப் பரீட்சை – 2011 ஜூலை

## முகாமையியல்
(Management)

31-07-2011
காலை
[10.30 – 12.00]

(56) வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் பகுதி

பக்கங்களின் எண்ணிக்கை: 02
வினாக்களின் எண்ணிக்கை: 06

**நேரம்: 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள்**

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

  *(1) இது வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் "**முகாமையியல்**" பகுதியாகும்.*

  *(2) ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.*

  *(3) விடைகள் யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த ஒரே மொழியிலேயே எழுதப்படல் வேண்டும்.*

  *(4) வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தில் பரீட்சார்த்தி ஒருவர் சித்தியடைவதற்கு வியாபாரச் சட்டம் மற்றும் முகாமையியல் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் தேவைக்கேற்ப குறைந்த பட்சம் 40% அல்லது 50% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.*

  *(5) மொத்தம் 50 புள்ளிகள்*

---

**01**. (a) "வியாபாரம் (business)" என்னும் பதத்திற்கு வரைவிலக்கணம் தருக. (02 புள்ளிகள்)

(b) வியாபாரமொன்றின் பொருளாதார, சமூகக் குறிக்கோள்களுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(c) "அரசாங்கத்திற்குச் சொந்தமானதும் அதனால் முகாமை செய்யப்படுவதுமான வியாபாரங்கள் எப்போதும் சமூக நலன்களை நோக்காகக் கொண்டவையாக இருக்கின்றன." இந்தக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடையினை காரணங்களுடன் விபரிக்குக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**02**. (a) "முகாமை" எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(b) முகாமைத்துவம் ஏன் தேவைப்படுகிறது? இரண்டு காரணங்களைத் தருக.
(02 புள்ளிகள்)

(c) Katz மற்றும் Khan என்போரால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவத் திறன்கள் (Management skills) மூன்றினை (3) விபரிக்குக. (06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**03.** (a) "மனித வள முகாமைத்துவத்தை" வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(b) "ஆட்சேர்ப்பு (recruitment)" மற்றும் "ஆட்தேர்வு (selection)" ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(c) ஒழுங்கமைப்பொன்றிற்கு திட்டமிடல் முக்கியமாவது ஏன் என விபரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**04.** (a) அதிகாரம் (Authority) மற்றும் பொறுப்பு (Responsibility) என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. (04 புள்ளிகள்)

(b) அதிகாரக் கையளிப்புக்கான (delegation of authority) காரணங்கள் இரண்டினை (02) விளக்குக. (02 புள்ளிகள்)

(c) பன்முகப்படுத்தலின் அனுகூலங்களையும்(advantages) பிரதிகூலங்களையும்(disadvantages) விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**05.** (a) விருப்பங்களிலிருந்து (wants) தேவைகளை (needs) வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)

(b) சந்தைப்படுத்தல் (marketing) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (02 புள்ளிகள்)

(c) "சந்தைப் பிரிவாக்கம் (Market Segmentation)" என்பதையும் "சந்தை இலக்கு வைத்தல் (Market Targeting)" என்பதையும் பொருள் வரையறை செய்க. (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**06.** (a) "கட்டுப்படுத்தல்" என்பதனை ஒரு முகாமைத்துவத் தொழிற்பாடாக பொருள் வரையறை செய்க. (02 புள்ளிகள்)

(b) "முன்னூட்டல் கட்டுப்பாடு (Feedforward Control)" மற்றும் "பின்னூட்டல் கட்டுப்பாடு (Feedback Control)" ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(c) விளைதிறனான கட்டுப்பாட்டு முறைமையின் (effective control system) பண்புகளில் நான்கை (04) விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

- o0o -